உ

கணபதி துணை.

ஸ்ரீஜ்ஞாநஸம்பந்தஸ்வாமிநேநம:

# சற்குருமணிமாலை


திராவிடசித்தாந்தசைவவியவஸ்தாபக

ஸ்ரீமதாறுமுகநாவலபகவத்பாதபாதாரவிந்தரேணுசேகரரும்

யாழ்ப்பாணத்துவட்டுக்கோட்டைச்

சைவப்பிரகாசவித்தியாசாலை

திருநெல்வேலி ஸ்ரீஜ்ஞாநஸம்பந்தஸ்வாமி மடாலயம்

இவ்விரண்டனது பிரதிஷ்டாபகருமாகிய

**அம்பலவாணநாவலர்ஸ்வாமிகள்**

செய்தது.



இஃது

௸ சைவப்பிரகாசவித்தியாசாலைத் தலைமை உபாத்தியாயர்

வே. சின்னத்துரைப்பிள்ளையால்

சென்னபட்டணம்

ஸ்டார் ஆப் இந்தியா பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

கலியப்தம் ௫௦௧௨-சாதாரண ௵ ஆவணி௴ ௧௭௳.



(*Copyright Registered.*)

சிவமயம்.

# முகவுரை.

நமது குருமூர்த்திகள் ஸ்ரீமத் ஆறுமுகநாவலர் ஸ்வாமிகள் வடக்கே பிங்கலை நாடியாகிய இமயமும் நடுவே சுழுமுனை நாடியாகிய தில்லைவனமும் தெற்கே இடைநாடியாகிய இலங்கையுமாக "மூன்று மிவை சிவ பூமியே" எனத் திருமூலநாயனார் திருமந்திரத்தில் தெளிவெடுத்தெண்ணிய அச்சிவபூமிகள் மூன்றனுள் ஒன்றாய் இடை நாடியாகிய இலங்கையெனப்படும் ஈழமண்டலத்திலே வடசாரதாகிய யாழ்ப்பாணத்திலே நல்லூரிலே கார்காத்த வேளாளவருணத்திலே முடிதொட்டவேளாளராகிய பாண்டிமழவர்குடியிலே ஞானப்பிரகாசஸ்வாமிகள்மரபிலே வந்து திருவவதாரஞ் செய்து தாம் அவதரித்த தமிழ்நாட்டின் நிலைமைக்கேற்ப நமது தெய்வத்தமிழ்நூற்கல்வியறிவின் முற்றுணர்வு பெற்ற பாரங்கதராயும், அதற்கங்கமாக ஆரியமாகிய வடமொழியையும் உலகநிலைக்கேற்ப ராஜிகமாகிய ஆங்கிலத்தையும் கைவரப்பெற்றும், தாம் அவதரித்த சைவசமயமரபிற்கேற்பக் கர்மகாண்டம் ஞானகாண்டம் என இருவகைப்பட்டு வடமொழி தென்மொழியின்கண்ணுள்ள சைவசமயசாஸ்திரங்க

மூன்று பிரகாரத்தாலும் இத்தமிழுலகத்தை வாழ்வி
த்து இத்தமிழுலகம் வாழவந்த திராவிடசைவவாசஸ்
பதி என்றும் மகோபகாரக மகாபுருஷரென்றும்
தம்மை யாவருமொருங்கே கொண்டாடும் மகாப்பிர
சித்திபெற்றார்.

ஸ்ரீமந்நாவலர்ஸ்வாமிகள் சைவசமயத்தினுள்ளும்
சிவபெருமான் அருளிச்செய்த முதனூல்கள் வேதம்
சிவாகமமென இரண்டு, அவற்றுள்ளே வேதமும்
அதன் வழித்தாகிய வைதிகமும் பொது, சிவாகம
மும் அதன் வழித்தாகிய சைவமும் சிறப்பு, சிவாக
மம் ஏனை நூல்களைத் தனக்கு அங்கங்களாகிய பூர்வப
ட்சங்களாகக்கொண்டு அங்கியாகிய சித்தாந்தம் தானு
தலால் சித்தாந்தமென்றும் தந்திரமென்றும் யோகரூடி
நாமத்தையுடையதாமென்னும் தாரதம்மியத்தைத் தமது
நூல்களாலும் உபந்நியாசங்களாலும் சைவசமயிகளு
க்கு இனிது எடுத்து விளக்கி அங்ஙனமே அதனை நிலை
நிறுவுதலும் செய்தருளினர்.

வேதம் சிவாகமம் இரண்டும் வடமொழியிலுள்
ளனவாதலால் அவற்றின் முடிபொருளைத் தமிழுலகம்
உய்யவேண்டித் தமிழர்க்கறிவுறுத்த வேதமே தமிழில்
திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் திருநாவுக்கரசுநாய
னார் ஸ்ரீசுந்தரமூர்த்திநாயனார் ஸ்ரீமந்மணிவாசகஸ்வா
மிகள் என்னும் சிவாம்சபூதர்களாகிய சமயாசார்யர்
களை இடமாகக்கொண்டு அருள்வடிவிற்றாய் அவர்கள்
வாக்கிற் கலந்து அவதரிப்ப அவர்கள் சிவமே தாமாய்
நின்று பாவடிவினருளிச்செய்த தேவாரதிருவாசகங்க

ளாகிய திருநெறித்தமிழ்த்திருமுறைகள் அருட்பாக்க ளாகிய தமிழ்வேதங்களாதலேயும், சிவாகமமே திருக் கைலாசபரம்பரையில் ஸ்ரீமத் தக்ஷிணாமூர்த்தியைப் பிர தமகுலபதியாகக்கொண்டுவந்த நந்திமரபில் ஸ்ரீமந் மெய்கண்டசந்தானத்தில் ஈராட்டைஞானப் பச்சிளங் குழவியாகிய ஸ்ரீமந்மெய்கண்டநாதசிவாசார்யர், சக லாகமபண்டிதராகிய ஸ்ரீமத் அருணந்திசிவாசார்யர், ஸ்ரீமிகமஞ்ஞானசம்பந்தசிவாசார்யர், சத்தியோமுக்திப் பிரதர் ஸ்ரீமத் உமாபதிசிவாசார்யர் என்னும் சந்தானு சார்யர்களேயும் இவர்தம்வர்க்கத்துட் பொருந்தினவர் களாகிய திருவிசலூர் உய்யவந்ததேவநாயனார் திருக்க டவூர் உய்யவந்ததேவநாயனார் மனவாசகங்கடந்தாரெ ன்னும் சிவாசார்யர்களேயும் இடமாகக்கொண்டு அருப வஞானவடிவிற்ருய் அவர்கள்வாக்கில் வந்தவதரிப்ப அவர்கள் சிவமே தாமாய்நின்று பாவடிவிலருளிச்செ ய்த சிவஞானபோதம் சிவஞானசித்தியார் சிவப்பிர காசமுதலிய அநுபவஞானத்திருமுறைகள் பதினுன் கும் திராவிடசித்தாந்தங்களாதலேயும், இந்தமுறையால் வேதசிவாகமங்கள்போல இத்தமிழ்வேதங்களும் திரா விட சித்தாந்தங்களும் ஈஸ்வரவாக்கியங்களேயாய் ஸ்வ யம் பிரமாணங்களாதலேயும், தமிழர்களாகிய சைவசம யிகள் இவற்றை அங்ஙனம் புத்திபண்ணித் தமது நியம பாராயணத்திலும் நியமசிரவணத்திலும் அநுபவஞா னத்திருமுறைகளாகப் போற்றி அவற்றின் பொருளேக் குருமுகமாகக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து நிஷ்டை கூடிச் சிவப்பிரசாதம் பெறல்வேண்டுமென்பதையும்,

தமிழில் ஏனையர் பாக்களும் ஏனையர் சித்தாந்தங்களும் அவரவர் தாரதம்மியவகைபற்றிக் கொள்ளற்பாலனவும் தள்ளற்பாலனவுமாய்ப் பல பேதமுற நிற்பனவாதலால் அவை இவைபோலாகாவென்பதையும், அவற்றை இவற்றிற்குச் சமமாகக்கொண்டு இவற்றோடொருங்குவைத்துப் பாராட்டுதல் பிராந்தியாதலொன்றோ, அது வைதிகசைவ மரபிற்கேலாது அம்மரபை உல்லங்கனம் பண்ணிய குலபாதகமாய்ச் சிவாபசாரமாய் உய்தியில் குற்றமாமென்பதையும் தமது நூல்களாலும் உரைகளாலும் உபந்நியாசங்களாலும் இனிது எடுத்து விளக்கி அங்ஙனம் நிலைநிறுவுதலும் செய்தருளினர்.

தேவார திருவாசகங்களாகிய தமிழ்வேதங்கள் எட்டுத்திருமுறைகளாக அவற்றதுசார்பில் திருமாளிகைத்தேவர் முதலிய சிவாநுபூதிச்செல்வர்கள் அருளிச்செய்த திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் ஒன்பதாந்திருமுறையாகவும், திருமூலநாயனார் அருளிச்செய்த திருமந்திரம் பத்தாந்திருமுறையாகவும், திருவாலவாயுடையார்முதல் நம்பியாண்டார்நம்பி யீறாக அபியுக்தர்களருளிச்செய்த திருமுகப்பாசுரம் முதலிய பிரபந்தங்கள் ஒருங்குசேர்ந்ததொகுதி பதினோராந் திருமுறையாகவும், ஸ்ரீமதானந்த நடராஜமூர்த்தி "உலகெலாம்" என்று அடியெடுத்துக்கொடுக்க நமது ஸ்ரீமத் விருஷபஸ்வாமிசரணர் சேக்கிழார்ஸ்வாமிகள் அருளிச்செய்த "திருத்தொண்டர் பெரியபுராணம்" பன்னிரண்டாந் திருமுறையாகவும் திருமுறைகண்ட ராஜராஜ அபயகுலசேகரசோள்மகாராஜா காலத்தில்

நம்பியாண்டார்நம்பியினாலும் அநபாயசோளமகாராஜா காலத்தில் சேக்கிழார்நாயனாராலும் செப்பேடுசெய்து வகுக்கப்பட்டதென நமது சத்யோமுக்திப்பிரதர் ஸ்ரீமத் உமாபதிசிவாசார்யபூஜ்யபாதர்கள் திருமுறைகண்டபுராணத்திலும் சேக்கிழார்புராணத்திலும் அருளிச்செய்தபடி இத்தனை திருமுறைகளும் சேர்ந்து அத்தமிழ்வேதங்களுக்கு உபப்பிரும்மணங்களாய் ஆப்தவாக்கியங்களாதலையும் தமது நூல்களாலும் உரைகளாலும் உபந்யாசங்களாலும் எடுத்து இனிது விளக்கி அங்ஙனம் நிலைநிறுவுதலும் செய்தருளினர்.

இங்கே வேதரூபமும் உபப்பிரும்மணரூபமுமாக வகுத்துக் கூறிய அருளநுபவஞானத்திருநெறித்தமிழ்த் தெய்வத்திருமுறைகள் பன்னிரண்டனுள் பன்னிரண்டாவதாகிய திருத்தொண்டர்பெரியபுராணம் தமிழிற் பத்தியரூபமாயிருத்தலால் அது கற்றோர்க்கன்றி ஏனையோர்க்கு எளிதில் உபயோகமாகாமையால் கற்றோரும் மற்றோருமாகிய எல்லார்க்கும் உபயோகமாகவேண்டி அதனை அருளிச்செய்த சேக்கிழார்நாயனாரிடத்தில் தாதாத்மியரூப அபேதபாவனை தமக்குவந்து அவ்வபேதபாவனாசித்தியினால் அச்சேக்கிழார்நாயனாரே தாமாய்நின்று கருணையினால் அப்பெரியபுராணத்தைக் கத்தியரூபமாகச் செய்து அதனைக் கத்தியரூப "பெரியபுராண" மென்னும் அப்பெயரினாற்றானே உலகுய்ய வெளியிட்டு வேதநெறி சைவநெறி பத்திநெறி என்னும் மூன்று பகுப்பினதாய்ச் சிவாகமங்களிற் செவ்வேபிரதிபாதிக்கப்பட்ட சரியை கிரியை

யோகம் ஞான மென்னும் நான்குபாதங்களையும் அநுஷ்டானத்திலும் அநுபவத்திலும் வைத்துப் பிரதிபாதித்து வேதசம்மதமாய்ச் சிவாகமப் பிரதிபாதிதமாகிய சைவசித்தாந்தத்தினது சர்வோத்கர்ஷத்தை நிலைநிறுவுதலும் செய்தருளினர்.

தமது கத்தியரூப "பெரியபுராண" த்தால் நிலைநிறுவிய சைவசித்தாந்தசர்வோத்கர்ஷத்தைப் பிரமாணம் லக்ஷணம் சாதனம் பிரயோஜனம் என்னும் நான்குதிறத்தின் வைத்துப் பிரதிபாதிப்பன திராவிடசித்தாந்தங்களாதலால் அவற்றின்பொருள் அவற்றிற்குரிய அதிகாரமுறையில் சிவதீக்ஷாவான்களாய்க் கற்றோர்க்கன்றி ஏனையோர்க்குப் புலப்படாமையால் அது கற்றோரும் மற்றோருமாகிய எல்லார்க்கும் உபயோகமாகவேண்டிக் கருணையினால் அவற்றின்பொருளைப் பிரச்சினோத்தரரூபமாகிய "சைவவினாவிடை" யென்னும் சிறு பிரபந்தங்களிலமைத்து அச்சித்தாந்தப்பொருளைப் பாலர்வரை அவரவருள்ளத்துப் பதித்து நிலைநிறுவுதலும் செய்தருளினர்.

இனி அச்சித்தாந்தப்பொருளைக் கேட்டற்கு அதிகாரிகளாவார்க்கு இன்றியமையாது வேண்டப்படும் குணங்கள் சாமாந்யம் விசேஷமென இருதிறப்படுதலால் அவற்றை யுணர்த்துதற்கு முறையே சாமாந்ய நூல்களாகிய பாலபாடம் முதலியவற்றையும் விசேஷ நூல்களாகிய சைவசமயநெறியுரை முதலியவற்றையும் தாமே செய்தும் திருத்தியும் வெளியிடுதலும் செய்தருளினர். இன்னும் திருக்கைலாசபரம்பரை ஸ்ரீமங்மெய்

கண்டசந்தானத்தில் வந்த தமது சைவசித்தாந்தத்து க்கு அனுகூலங்களாக நமது நாவலர்ஸ்வாமிகள் சாமா ந்யவகையாலும் விசேஷவகையாலும் செய்தருளியன வும் வெளியிட்டனவும் வெளியிடப்பெறாது எஞ்சிநின் றனவுமாகிய நூல்களும் உரைகளும் உபந்நியாசங்களும் மிகப்பல. அவை இங்கே விரிப்பிற் பெருகும்.

நமது தமிழுலகத்துப் பொதுவகையால் பிரஜைக ளது யோகக்ஷேமத்தை விரும்பி நமது நாவலர்ஸ்வாமி கள் ஆங்காங்கு மகாசபைகளைக்கூட்டிப் பிரஜாநுக்கி ரகரூபமாகச் செய்த செயல்கள் பல. சிறப்புவகையால் வைதிகசைவசமயிகளாகிய விசேஷப்பிரஜைகளது விசே ஷயோகக்ஷேமத்தை விரும்பி ஆங்காங்கு விசேஷமகா சபைகளைக்கூட்டி விசேஷப்பிரஜாநுக்கிரகரூபமாகச் செய்த செயல்கள் பல. அவரது இவ்வநுக்கிரகச் செய ல்களுள் வேதம் சிவாகமம் தமிழ்வேதம் திராவிடசித் தாந்தம் முதலிய நூல்களுக்கும் வடமொழிக்கும் தமிழு க்கும் அப்பிராமாண்யத்தையேனும் அநங்கீகார்யத்வ த்தையேனும் அப்பிராபல்யத்தையேனும் மற்றெவ் வித லகுத்வகுணத்தையேனும் தத்தமக்கமைந்த ஒவ் வோர்சார்பின் துரபிமானமிகுதியால் புறச்சமயிக ளாயும் அகச்சமயிகளாயும்நின்று ஆரோபித்துத் தத்தம் சார்பிற்கே ஒப்புயர்வின்மை பாராட்டிவந்த அவ்வச்சார்பினரைத் தமது நூல்களாலும் உரைக ளாலும் உபந்நியாசங்களாலும் கண்டித்துச் சிஷ்டா சார பரம்பரையால் அவ்வவற்றிற் கமைந்த பிராமாண் யத்தையும் அங்கீகார்யத்வத்தையும் பிராபல்யத்தையும்

மற்றும் கௌரவகுணங்களையும் அவ்வவற்றின்கண் முறையே வைத்து இனிது விளக்கி நிலைநிறுவுதலும் செய்தருளினர்.

இவற்றுள்ளும் தமிழ்வேதம்முதலிய அருளநுபவ ஞானத்திருநெறித்தமிழ்த்தெய்வத்திருமுறைகள் பன்னிரண்டும் சிவாகமமும் திராவிடசித்தாந்தம் பதினன்கும் என்னும் இவற்றையே தமது சர்வஸாரஸ்வமாகக் கொண்டவர் நமது நாவலர்ஸ்வாமிகளாதலால் அவற்றிற்கு அனுத்துணைலகுத்வம் எத்துணைப் பூஜ்யர்களாய் எத்துணை வலியர்களாகிய எவர்களால் வந்தாலும் அதனைத் தாம் அணுத்துணையும் சகிக்காது தமது உடற்கும் பொருட்கும் எத்தனை இடையூறு அதனல்வரினும் அதுவும் திருவருளால் வருவதல்லது மற்று அவரால் வருவதன்றென்பதை உறுதியாகக் கடைப்பிடித்துத் தமது ஆன்மார்த்த பூஜ்பராகிய அழகியசிற்றம்பலமுடையார் திருவருளே அந்தாங்கதுணையாகக் கொண்டும் தமது இஷ்டதெய்வமாகிய ஸ்ரீசுப்பிரமண்ணியஸ்வாமியே ஆபத்ஸகாயராய்த் தமக்கு முன்னிற்கும் தெய்வமாகக் கொண்டும் தமது அவ்வித இடையூற்றுச்சந்தர்ப்பங்களில் எவ்வெவ்விடையூறும் தம்மையணுகாது தமதருள்வலியால் அவற்றை அதிக்கிரமித்து அவ்வருள்வலிபற்றிய தமது பராக்கிரமபௌருஷத்தின்கண் தலைநின்று தமது சர்வஸாரஸ்வத்துக்கு ஆரோபிதமாகிய அந்தலகுத்வத்தைக் களைந்து அதனது குருத்வத்தை உலகறியத் திருவருள்சாட்சியாக நிலைநிறுவுதலும் செய்தருளினர். இந்நாள் மேலைத்தேசத்தினின்றும் பெரும்ப

ணச்செருக்கோடு வந்து நமது தமிழ்நாட்டில் பெரும் பாலும் ஈனஜாதிகளை ஓர்சார் பற்றிய ஊணமதம் மிக எளியதொன்றாகலின் அது நமது விஜயகேசரி நாவலர் ஸ்வாமிகள் புருவநெரிப்பினால் தன் வலிகுன்றி ஒடுங்கியது அவரது பாலலீலாவித்தியாவிநோதசமயத்திலென்பர் அஃதுணர்ந்தோர். அது அவர் தமக்கோரரிதெனக்கொண்ட செயலன்று. எதிலும் எம்பெருமானது அருள்வலியும் சத்தியமும் கடைப்பிடியும் பௌருஷமும் அகாமர்களுமொப்பியதென்பது அனுபவமேயாம்.

இனி அவரது ஸ்வாநுஷ்டானமோவெனின், தாமெவ்வெவற்றை லோகோபகாரமாக எப்படி யெப்படி நிலை நிறுவினரோ அப்படி யப்படியே வேதம் சிவாகமம் விதித்தமுறையுழி நின்று தர்மசாஸ்திரங்கள் சொல்லிய சாமாந்யகுணங்களும் சிவசாஸ்திரங்கள் சொல்லிய விசேஷகுணங்களும் தம்பால் அமையப்பெற்றுப் பூர்வ புண்ணியயுகங்களிலுள்ள ரிஷிகள் முனிவர்கள் முதலிய புண்ணியர்களும் கடைபோகப் போற்றமுடியாதென்ற அத்தியந்தம் துஷ்கரமாகிய நைட்டிகப்பிர்மசரியவிரதத்தை அணுத்துணையேனும் மாசுமறுக்கலவாது அத்தியந்த ஜ்வலனமாகிய அக்கினிதுல்ய நியமவிரதமாகப் பூண்டு அதனால் எவரையும் மாற்றும் துவரப்பொல்லாத இக்கலிவலியை ஜயித்த விஜயகேசரியாய்ச் சிவாகமங்கள் விதித்தபடி சிவாசார்யர் முன்னிலையாகச் சமயம் விசேஷம் நிர்வாணம் என்னும் மூன்று சிவதீட்சைகளும் பெற்றுச் சிவசரியை சிவகிரியை சிவயோகம் சிவஞானமென்னும் நான்குபாதமும் வாய்

ந்து, சிவபூசையின் முயன்று தமக்கமைந்த ஸ்படிக லிங்கமூர்த்தியில் ஸ்ரீசிதம்பரசிற்சபை அழகியசிற்றம்பல முடையாரே தமது ஆன்மார்த்த பூஜ்யராகக்கொண்டு, அவரதுபூசையில் எவ்வாற்றாலேனும் எத்துணையேனும் வழுவந்துவிடுமோ என்னும் அச்சத்தால் சர்வஜாகரூக ராய்ப், பூசைக்குவேண்டப்படும் இடம் பொருள் ஏவல் கள் குறைவறவமைந்த சம்பந்நராய், முன்னும் பின்னும் நிகழும் தமது சர்வகாரியங்களும் தமது பூஜைக்கங்க மாக அத்தனையும் அதன்கண்ணேபோய் முடிவுபெற அதனையே தமக்கு மிக முக்கியமாகக் கொண்ட பரம தற்பரராய் இப்படியே அக்கினியும் அஞ்சும்படி அத் தனைபாவநமாகத் தமது அழகியசிற்றம்பலமுடையா ரது நித்தியபூஜையைச் சர்வோபசாரங்களோடு நிர்வியா சபக்தியினால் யாவஜ்ஜீவம் செய்து முடித்த சிவபூஜாப ராயணராய், உண்மைநாயன்மார் சமயாசார்யர் சந்தாந சார்யர் திருவடிக்கமலங்கள் சதா மலர்ந்துகொண்டிரு க்கும் திவ்யபவித்திர தாடகம் தமது ஹிருதயமாக அவ ர்களையும் அவர்கட்கெளிவந்து நின்ற அழகிய சிற்றம்பல முடையாரையும் மறவாது சதா சேவித்து வாழும் பரம சேவகராய், வேதாகமங்களும் வைதிகசைவசமயமும் சிவாகமம் விதித்தபடி சிவாலய நித்தியநைமித்திகங் களும் தெய்வத்தமிழ்மொழியும் உண்மைநாயன்மார்க ளது அருளனுபவஞானத் திருநெறித்தமிழ்த்தெய்வத் திருமுறைமேன்மையும் உலகெங்கும் மிக்கோங்க மெல் வினையாலேனும் வல்வினையாலேனும் அவற்றை வளர் க்குமாறெழுந்த பேராசையன்றி வேறாசையிலராய்: அவ்

வுண்மைநாயன்மார் குருபூஜை மாகேஸ்வரபூசை அவர் கள்மகிமாவர்ணனம் இவற்றில் சதா கர்த்தாவும் காரயிதாவுமாய்ப், பஸ்மோத்தூளனதிரிபுண்டரலாஞ்சிதவிக்கிரகராய், ருத்திராக்ஷமாலாபரணாலங்கிருதராய்ச், சிருக்சந்தனதாம்பூலாதிபோகசாதனவர்ஜ்ஜிதராய், ஸ்ரீபஞ்சாட்சரஜபபரராய்ச், சிவத்தியானதற்பரராய்ச், சிவஞ்ஞானநிஷ்டராய்ச், சிவாநுபூதிச்செல்வராய்த் தமது நிகமாகமோக்த சுத்தாத்வைத சித்தாந்தசைவநைட்டிக சிவாச்சிரமவிரதத்தைச் சாஸ்திரசிஷ்டஜனலாளநீயமாக யாவஜ்ஜீவம் நிர்வகித்துக்கொண்டுவந்து செவ்வே முடித்த சைவபுருஷாத்தினம் நமது குருமூர்த்திகள் ஸ்ரீமத் ஆறுமுகநாவலர்ஸ்வாமிகள் இது அவரது ஸ்வாநுஷ்டானசங்கிரகம்.

இனி நமது நாவலர்ஸ்வாமிகளிடத்தில் நாமறிய உலகறிய விளங்கிய விசிஷ்ட குணங்களாவன: ஈசுர பக்தி, பாசவைராக்கியம், ஜீவகாருண்யம், பிர்மஜ்ஞானம், ஔதார்யம் (கொடை) ஆசிருதசம்ரட்சணம், (அடைந்தவர்களைக்காத்தல்,) சௌலப்பியம் (எளியராதல்,) தாட்சண்யம் (கண்ணோட்டம்,) மதுரபாஷணம் (இன்சொலுடைமை,) ஹிதகாரித்வம் (இதத்தைச்செய்தல்,) நியாமகத்வம் (நியமித்து நடத்துதல்,) லோகாபவாதபயம், சஜ்ஜனசங்கம் (நல்லாரிணக்கம்,) பரகுணப்பிரீதி, சிஷ்டஜனபராதீனத்வம், பாரம்பர்ய பரிஜ்ஞானம், சௌஹார்த்தம் (நல்லமனமுடைமை,) சாதுஜனவாற்சல்யம், நிர்ப்பயத்வம், நிரகங்காரத்வம், (யானென்பதில்லாமை,) நிர்மமத்வம் (எனதென்பதில்

லாமை,) சத்தியவிரதம், சத்தியசங்கல்பம், பிரபுத்வம், நியாயாநுவர்த்தித்வம் (நியாயத்தின்பின் தொடர்தல்,) தத்வகதனம் (உண்மைபேசல்,) ஜிதேந்திரியத்வம், நிஸ்பிருஹத்வம் (ஆசையின்மை,) பிரபஞ்சதிருணீகாரம் (பிரபஞ்சத்தைத்திருணமாக நினைத்தல்,) கௌரவம், ஹேயகுணவர்ஜனம் (தள்ளப்பட்ட குணங்களைவிடுதல்,) குருலிங்கசங்கமநம்ரதை (குருலிங்கசங்கமவழிபாடு,) உபாதேயகுணஸ்வீகாரணம் (கொள்ளப்பட்ட குணங்களைத் தனதாகக்கொள்ளல்,) ஔந்நத்தியம் (உயர்வுடைமை,) சமதிருஷ்டி, சரசோல்லாசம், பிரசந்நதை, ஸ்நிக்தத்வம் (குழைவுடைமை,) அகுதோபயங்கரத்வம் (பிறர்க்கு எவ்விதத்தும் பயத்தைச் செய்யாமை,) ஆர்ஜவம் (நேர்மை,) அஹிம்சிரத்வம் (துன்புறுத்தாமை,) அநாக்கிராததைந்யகந்தத்வம் (தைன்னியத்தினது மணமும் தெரியாமை.) அக்கிரகண்யத்வம், அசைத்துவம் (அசையாமை,) பிரதிஜ்ஞாத சமாபநம் (செய்வதாக மேற்கொண்டதைச் செய்தேமுடித்தல்,) உபகாரகத்வம், ஆத்மசக்தி (தைரியசக்தி,) பாரமார்த்திகதிருஷ்டி, அயாசகத்வம், பரமோத்தேசியகத்வம், பாரம்யம், பாவநத்வம், ஆசாரசீலத்வம், வாக்மித்வம், ஸ்வாதந்திரியம் (தங்யத்தனுதல்,) ஸௌஜந்யம், இஷ்டஜனபரிபாலனம், சித்தாந்தாபிநிவேசம் (சித்தாந்தத்திற் புகலுடைமை,) விவேகம், அநாயாசத்வம், கோப்யமானத்வம், காம்பீர்யம், பிரௌடிமை இவை முதலாக நூலும் மகாத்மாக்களும் கொண்டாடிய பலகுணங்களாம்,

இப்பல குணங்களுக்குமாலயம் நமது குருஸ்வாமி களாதலால் எந்த விவகாரமாயினும் அதனதன் சித்தா ந்தம் தமக்கு முன் ஸ்வயமே வந்து நிற்பத் தாம் அத னைப் பற்றிநின்று விவகரிப்பதல்லது மருளினாலேனும் அவிச்சையாலேனும் அவாவினாலேனும் அச்சத்தினா லேனும் மதாபிமானத்தினாலேனும் பூர்வபட்சத்தைச் சித்தாந்தமாகப் பற்றிநின்று விவகரிக்கும் விபரீதவழ க்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் நமதடிகளார்க்குத் தெரி யாது. அவ்வியல்பினதோரறியாமை அவர்க்கோரிலக் கணமாக நாம் ஈண்டு நிரூபிக்கின்றோம். இது நாடாத் திரமன்று உலகமறிந்தொப்பிய உண்மை. ஒன்றில் ஐயுற்றுவந்தோரிருவருள் வியவகாரத்தில் ஒருவர் மற் றொருவரைப் பார்த்து இது "யார்சொல்லியது யாரெழு திய"தென்று வினவுவார்க்கு "நாவலர் சொல்லியது நாவலரெழுதிய"தென்று விடையிறுக்கப் படுமெனின் அதற்கதுவே சித்தாந்தம் அதில் ஐயமில்லை. இது இந் நாள் நமது தமிழுலகவாய்பாடு. ஆரிய உலகத்தும் ஆங்கில உலகத்தும் சென்றவரை இதுவும் ஓர்வா ய்பாடு.

"சித்தாந்தமே சித்தாந்தம் அதுவல்லாதன பூர் வபட்சங்க" ளென்று ரத்திநத்திரயகிரந்தாத்தினம் முறையிட்ட நிருபபத சித்தாந்தத்தையே சித்தாந்தமெ ன்று கடைப்பிடித்து அதனை எங்கும் வளர்த்து நிறு விய நமது சித்தாந்தச்செல்வனார்க்கு எவ்விவகாரத்தி லும் பூர்வபட்சத்தை விட்டு அகாமர்களும் மதிக்கச்

சித்தாந்தத்தை நிறுவுதல் இயற்கைக்குணமென்பது சொல்லவும் வேண்டுமோ?

எம்பெருமான் நாவலர்பெருமான் வந்தவதரித்த புண்ணியந்தான் அன்னியஜாதிகளால் அன்னியபாஷைகளால் அன்னியமதங்களால் ஊடுகலந்து நமது பரதகண்டம் மிச்சிரமாய் இருண்மூடிய கலியினின்னுட் காடாந்தகாரத்தில் வேதாகமங்களும் திராவிடவேதசித்தாந்தங்களும் வைதிகசைவமும் சிவசின்னங்களும் சிவதர்மசிவஞானங்களும் சிவாலயகைங்கரியங்களும் குருபூஜைமடங்களும் பசுமடங்களும் நந்தனவனங்களும் தர்மசாலைகளும் வேதசிவாகமஞானாலயங்களும் திராவிடசைவப்பிரகாசவித்தியாசாலைகளும் வைதிகசைவோபந்யாசங்களும் சிவநாமோத்கோஷமும் வைதிகசைவசபாநிர்மாணங்களும் சிவசாஸ்திரநிக்ஷேபஸ்தானநிர்மாணங்களும் மெய்கண்டசந்தானசித்தாந்தபாரம்யமும் சிவோத்கர்ஷ நிச்சயஞ்ஞானமும் திரிபதார்த்தவிசாரமும் பந்தமுக்திவிவேகமும் சிவஞ்ஞானபரிபாலனமும் சிவபக்தமகோத்ஸவமும் சிவாசாரானுவர்த்தனமும் வர்ணாச்சிரமநியமங்களும் சிவாச்சிரமசீலங்களும் முதலிய உத்தமதர்மங்கள் வைத்த இடம் தொட்ட இடம் தெரியாமல் மறையப்போனவை புனருற்பவித்துப் பிரசன்னங்களாய் வெளிவர, இந்நாட் பலரும் நமது நாவலகுருப்பிரதிஷ்டாபிதசதாசாரானுவர்த்தகர்களாய் வித்வான்களும் சாதகர்களுமாய்க் குருவும் சீடர்களுமாய் உபந்யாசகர்களும் சுரோதாக்களுமாய்ச் சிவோத்கர்ஷ. சித்தாந்தோத்கர்ஷ. கிரந்தகர்

த்தாக்களும் காரயிதாக்களுமாய் அவற்றது அத்யாப
கர்களும் அத்தியேதாக்களுமாய்க் கர்மதபஜப தியான
ஞானரூபபஞ்சமகாயஜ்ஞகிருத்துக்களாய்ச் சிவசின்ன
தாரணைப் பிரசன்னவிலாசர்களாய்ச் சிவமகோத்ஸவ
திதிருக்ஷுக்களாய் அம்மகோத்ஸவதிரஷ்டாக்களாய்ச்
சிவமகோத்ஸவதர்சகர்களாய் அன்னதானவிலாசர்க
ளாய்ச் சர்வதர்மநிரதர்களாய்த் தமிழ்ப்பிரஜைகளெல்
லாம் தலையெடுப்ப நமது இத்தமிழுலகமும் அயலுலக
மும் சங்மங்கள சிவப்பிரகாசமாக இந்நாள் நிகழ்ந்து
கொண்டுவரும் மகைஸ்வரியகலியாணவைபவம் என்
பது யாரறியாதார்!! எம்பெருமான் வந்தருளிய புண்
ணியந்தான் இந்நாள் நாவலர் யாம் பாவலர் யாம் ஞானி
கள் யாம் யோகிகள் யாம் எனப்பல்லோரும் அங்ங
ங்கு ஞானமும் ஆசாரமுமுடையர்களாய்ப் பொருளும்
புகழும் பூஜ்யதையும் பெற்றுவாழும் அவரவர் இன்
பவாழ்வு என்பது யாரறியாதார்! இந்தக் காடாந்த
காரத்தில் எம்பெருமான் நாவலர்ஸ்வாமிகள் லோகப்
பிரகாசகராய் வந்தவரவை விமற்சரர்களா யுற்றுநோக்
குவார்க்கு அது சிவாஜ்ஞையினால் இத்தமிழுலகினிரு
ளைத் தடுத்து அதனை வாழ்விக்க வந்த வாழ்வின் வரவா
ய்முடியுமன்றி மற்று யாதென்று யாம் சொல்வோம்!

இனி ஒளியைத் தந்து இருளைத் தடுப்பவரெவரோ
அவர் குருவெனப்படுவராதலால் அவ்வியல்பினர் நமது
ஸ்ரீமத் ஆறுமுகநாவலர்ஸ்வாமிகளென்பது மேலைவிவ
காரங்களால் இனிதுபெறப்படுதலால் சிவாஞ்ஞையால்
நமக்கித்துணை எளிவந்த அவராற்பயன்பெற்ற இத்தமி

மூலகவாசிகளாகிய சைவசமயிகள் உண்மையில் அவர்க்குச் சீடர்களாக அவர்களுக்கெல்லாம் அவர் குரு ஆயினாரென்பது தானே சித்தித்தது. அதிலும் பிறர்க்குப் போதிப்பதோடமையாது தாமும் அங்ஙனம் ஒழுகிக் காட்டுவாராய்க் குருத்வத்துக்கு வேண்டப்படும் குணசாமக்கிரிகளது சத்பாவம் தம்பாலமைந்த தன்மையராதலால் அவர் இத்தமிழுலகம் போற்றும் சற்குரு ஆயினாரென்பதும் அங்ஙனமே சித்தித்தது. அதினும் தமது சற்குருத்வத்தில் தமது காலத்திற் றம்மோடொத்தவராய்த் தமக்குத் துணையாவார் ஒருவர் பிறரின்றித் தம்மையெதிரிட்டுவரும் பாதகங்களுக்கெல்லாம் தாமே பரிஹாரமும் தமக்கு வேண்டும் சாதகங்களுக்கெல்லாம் தாமே ஜனகத்துவமும் வகித்துத் தாமொருவரே தமது குருத்துவத்தைத் திருவருளைப்பற்றிநின்ற தமது தனிவலிகொண்டுய்த்த ஒப்புயர்வின்மைபற்றியும், தூண்டா ஒளியுடைமைபற்றியும், விலைமதிக்கவொண்ணாத மேன்மையுடைமைபற்றியும், உலகிற்கலங்காரமாதல்பற்றியும், ஜகந்மோகனத்வம்பற்றியும் சற்குருமணி என்று வழங்கப்பெறுதற்குரியராயினாரென்பதும் தானே சித்தித்தது. காலாந்தரங்களில் இருள்பெருகி ஒளிமறையும் காடாந்தகாரவேளைகளில் "அருபரத் தொருவ னவனியில் வந்து, குருபரனாகி யருளிய பெருமையைச் சிறுமையென் றிகழாதே" "முற்செய் தவத் தாற் கிழியீடு நேர்பட்டு" என்றபடி அதனதனளவிற் கேற்பத் தமது அம்சத்தால் நேரேதான் ஒவ்வோர் சுத்தசேதனங்களிற் கலந்துதான் ஈஸ்வரனே குருவாய்

வருவனென்பதும், அப்படிவருமவனது வரவிற்கு அடையாளம் என்னை என்னும் ஆசங்கையில் மகாஜனங்கள் எவனை எதிபலித்துச் சூழ்ந்து சேவிக்க எவன் சிஷ்டாசாரபரம்பரைக்கு மாறுபடாது அதனை அநுவர்த்தித்து அவர்களுக்கெல்லாம் மிக்க உபகாரகனாய் அவர்களைக் கைதூக்கிவிடும் விசிஷ்டகுணசீலனே அவனிடத்ததாகிய அவ்விசிஷ்டகுணமே அவ்வடையாளமாக அவனிடத்தில் ஈஸ்வரத்துவம் கொள்ளப்படுமென்பது ஆப்தர் வழக்காதலால் அவ்விசிஷ்டகுணம் தம்பாலுடையராய் வந்த வரினருள் ஒருவர் நமது நாவலர்ஸ்வாமிகளாதலால் இத்தமிழுலகம் அவரை அவ்வியல்பின்வைத்துப் போற்றக் கடைபூண்டு சிஷ்யபாவமெய்திற்றென்பது நிர்விவாதமேயாம்.

இத்தமிழுலகத்துள் நாயினேனும் ஒருவனாய் முன்னைப்பிறப்பினேதோ தவத்தால் எம்பெருமான் ஸ்ரீமத் ஆறுமுகநாவலசற்குருமணிகளது சிஷ்யகோடியிற்கடைக்கோடியின்வைத்தெண்ணி நிற்கப்பெறும் பெரும்பேறு பெறுவதோர் பெருவழியில் குறுக்கேநேர்ந்தேனாதலால் "யதாதேவேததாகுரௌ"

'தேவனிடத்து எப்படி அப்படியே குருவினிடத்தில்" பக்திசெயற்பாற்றென்று சுருதி ஆஞ்ஞை தந்தபடி நமது சற்குருமணிகளை நமது சேஷ்டர்களைப் பார்த்துக் கநிஷ்டனாகிய தமியேனும் மனம் வாக்குக் காயங்களால் சதாவழிப்பட்டு ஆட்செய்யப் பெற்றேனாயினேன்.

நம்மை ஆட்கொண்ட சற்குருமணிகளே

இக்கணமே முத்தியினை யெய்திடினும் யானினைந்த
வக்கணமே யானந்தந் தந்திடினு—நற்கணத்தார்
நாயகற்கு நாயகிக்கு நானடிமை யெப்பொழுது
மாயிருத்த லன்றியிலேன் யான்.

என்னும் சித்தாந்தவசனப்படி மனம் வாக்குக்காயங்களினால் வழிபட்டு ஆட்செய்யப் பெறுவதல்லது நமது சர்வஸ்வமும் தம்மதெனக்கொண்ட எம்மடிகளார்க்கு யாம் கைம்மாறு என ஒன்று செய்ய மிஞ்சி நின்றது மற்று யாதொன்றுளது!! ஆதலால் நமது ஆறுமுகநாவலசற்குருமணிக்கு அவர் நம்மைப் பெறுவித்த அவரருளை நினைந்து அதற்குக் கைம்மாறுகத்தான், இன்னும் அவரே நமக்குக் குருவடிவின்வந்து தமது அருளை விசேஷமாகப் பெறுவிக்க வேண்டிய பயனை நினைந்து அதற்கு வாயிலாகத்தான், அவர் தம்பான் மாறுததோர் பிள்ளைமை அன்பின்வழி நின்று புழுத்தநாயினுங்கடையேன் முன் மெய்கண்டதேசிகமாலை பஞ்சாக்கரதேசிகமாலைமுதலிய குருஸ்துதிசெய்த நமது ஞானமுதாதைகள் சென்றவழிச் செல்வேனாய் நமதுசற்குருமணிக்கு வப்பதோர் ஆரமென்னும் மாலையாகச் "சற்குருமணிமாலை" என்னு மிப்பிரபந்தத்தைச்செய்து சமர்ப்பித்தேனுயினேன். இதனால் "சற்குருமணிமாலை" என்னும் பெயர் இந்நூற்குக் காரணக்குறியாய் நிர்ப்பாதமாய்ப் பொருத்தமுற்றுநின்றமை ஈண்டுவிளக்கியபடியாயிற்று.

இனி மனம் வாக்குக் காயம் என்னும் இம்மூன்றும் பற்றிய வழிபாடுகளுள் மனம் காயம் என்னும் இரண்

டையும் பற்றிய வழிபாடு தன்னோடு நின்றுவிட வாக்கு ப்பற்றிய வழிபாடாகிய ஸ்துதியொன்றுதான் தனக்கு ப்போலப் பிறர்க்கும் தன்காலத்துப்போலப் பிறர்கால த்தும் உபகாரகமாய்நிற்கும் பொதுவழிபாடாதலால் இந்தச் "சற்குருமணிமாலை" யும் அங்ஙனமுபகாரக மாகவேண்டி அதனை ஈண்டு அச்சிற்பதிப்பித்து வெளி யிடுதலுமாயிற்று.

ஆதலால் குருபக்திசீலர்களாகிய சைவசமயிகள் யாவரும் "சற்குருமணிமாலை" என்னும் இப்பிரபந்த த்தை அன்போடு பாராயணஞ்செய்து குருப்பிரசாதத் தால் இகபரலாபங்களும் முத்தியின்பமும் பெற்று இன் பத்தினமர்ந்தினிது வாழக்கடவர்கள்.

☞ ஆறுமுகநாவலர்ஸ்வாமிகளது சரிதைகள் ஈண்டைக்கு வேண்டியவளவில் சாரமாகக் கூறப்பட் டன. அவற்றின் ஆநுபூர்விபற்றிய பரப்பு "நாவலவிஜ யம்" என நம்மால்செய்து வெளியிடப்பெறும் கிரந்தத் தில் காணலாம்.

*சேயெனக்குச்செவிலியெனச்சங்கானைமட்டுவிலிற்றீராதெ ன்றும், பாயபுகழ்த்தமிழெளிதிற்புகட்டிஞான்வடலியடைப்பமர் பண்பாள, ஞயகுணவேலாயுதக்குரவனவன்பதத்தையன்பாற் போற்றித், தாயனையநல்லூர்நாவலர்பெருமானருள்வாழ்விற்சா ர்ந்திட்டேனால்.*

*ஸ்ரீமதாறுமுகநாவலதிராவிடசைவவாசஸ்பதயேநம:*

இங்ஙனம்

**அம்பலவாணநாவலன்.**

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# சற்குருமணிமாலை

## காப்பு.

பூவலயஞ்செய்தமாதவமோருருப்போந்துவந்த
நாவலசற்குருமாமணிமாலைநயந்தியலப்
பாவலநம்பிக்கருண்மாமுறையுண்மைபாலித்தநங்
காவலநாரையிற்பொல்லார்கழலிணைகாப்பதுவே.

## நூல்.

திருவேயருட்செல்வமேசிவமேசிவசிற்சுகமே
மருவேமருவின்மலரேமலர்க்கற்பகவனமே
கருவேயிரித்தெமையாண்டிடநீயுருக்கண்டனையே
குருவேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧)

நாயேனையாளவொர்மாநுடக்கோலநயந்துபெற்ற
தாயேயெனைநனிபாராட்டியன்பிற்றழீஇயெடுத்து
மாயாவறிவமுதூட்டினையேயின்பவாழ்வுறுவான்
கூயாளெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௨)

புன்னெறிக்கேயறிவில்லாப்பருவத்திற்புக்குழன்று
பன்னரகாழவிருந்தேனையின்னருட்பார்வைநல்கித்
தொன்னெறிகாட்டியதாதாய்மெய்யின்பந்தொகுத்தலென்று
கொன்னெறியாறுமுகநாவலசற்குருமணியே. (௩)

பொறியேமனஞ்செலயானதன்பின்சென்றுபூங்குழலார்
மறியேய்கடைக்கட்கிரையாகிமாய்ந்தனன்வாய்ந்தவன்பும்
பறியேகொடுத்தனன்பார்ப்பதென்றோநின்பதமலர்க்கீழ்க்
குறியேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௪)

கல்லேனன்னூலவைகற்றுணர்ந்தார்தங்கழகத்தினுஞ்
செல்லேனறிவன்பருள்பொறையாதியசீலமொன்று
மில்லேனெந்தாயுய்யுமாறொருபாயமிசைப்பதென்று
கொல்லோவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௫)

தண்டேன்மலர்க்குழன்மாதரும்பொன்னுந்தரணியுமாய்ப்
பண்டேவருமுப்பகைதவிர்த்தாண்டருள்பாலிப்பது
முண்டேயருள்கநின்றொண்டர்தம்பாலன்புறவுரிமை
கொண்டேனெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௬)

பூவாரயனரியாரையுங்காமப்புரைவழிக்கே
யேவாநின்றார்விசயத்தம்பநாட்டினரிம்மதனார்
தேவேநின்பேர்சொலிற்றெண்டனிட்டேகுவர்தேர்ந்தனம்யாங்
கோவேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௭)

வீறுவெண்கொற்றக்குடைநிழற்கீழ்மணியாசனமே
லேறுவிருந்தரசாள்வதினன்றுன்னிணையடிக்கீழ்
மாறாதவன்பொடுபிச்சையென்றோர்ந்தனன்வாவென்றெனைக்
கூறாயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௮)

காலோய்ந்திலனமன்கையோய்ந்திலனயன்கன்மசன்மப்
பாலோய்ந்திலன்சென்றுமீள்வதுமாயினன்பாவியலை

நூலோய்ந்திலன்கற்றும்வாய்ந்திலன்ஞானநுவலருட்செங்
கோலோயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௯)

எத்தாதநாவுமிறைஞ்சாத்தலையுமெண்ணாதநெஞ்சுங்
காத்தாண்டநின்னுருக்காணாதகண்ணுங்கருக்கடந்த
மீத்தானமாள்பொருளேயெளியேற்குவிதித்தனையே
கூத்தாவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧௦)

தொண்டர்தஞ்சிரினையாத்துவைத்தார்பரிசுத்தருண்
மண்டுசலதியெங்குன்றையர்காவலர்வாலிதின்யாங்
கண்டிடநீயதுபாத்தளித்தாயெங்கலிதவிர்த்த
கொண்டலெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧௧)

அபாயமின்றேயுமநபாயனைவைத்தருண்முறைக்கே
யுபாயங்கொண்டார்குன்றைகாவலர்நீயவையுற்றுமன்ன
வுபாயங்கொள்ளாததுபாத்தளித்தாயிருவோருமொன்றுங்
குபாயங்கொளாறுமுகநாவலசற்குருமணியே. (௧௨)

தேவேமெய்ந்நாவலநாமத்தைப்பற்றிச்சிறந்தனர்முன்
பாவாணரங்கதுநின்றனைப்பற்றியபான்மையினு
லாவாநினக்கதுரூடியென்றேசிறந்தாயதருட்
கோவேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧௩)

அண்ணாவென்றன்செயனின்செயலாநின்னருண்மரபை
யெண்ணாமமென்னகங்கொண்டிங்கபேதத்திருந்துநின்பாற்
பண்ணாரச்செய்பணியூறின்றிமுற்றப்பணிக்கவருள்
கொண்ணாவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧௪)

நீறருட்கண்மணியெங்கேபஞ்சாக்கரநேர்மையெங்கே
வீறுயர்வைதிகசைவமெங்கேதமிழ்வேதமெங்கே
தூறிக்கலியிலெஞ்சேமானிர்நாள்வந்துதோன்றிலையேற்
கூறருளாறுமுகநாவலசற்குருமணியே. (௧௫)

சேசுவென்றோர்புதுப்புன்மதமேலைத்திசையிலுளோர்
காசொடுவந்ததைக்கண்டதுண்டஞ்செய்தகாட்சிவலி
யீசநினக்கோர்பெருமையதோவஃதிசைக்கவென்றுங்
கூசுமெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧௬)

மாதரைக்கண்டுமயங்காதநல்வரவாழ்வுநின்பா
லாதரவிற்பெறுமாதவஞ்செய்திலனன்பிலராம்
பாதகர்க்கென்றுமறிவரியோயன்பர்பாக்கியமே
கோதொழியாறுமுகநாவலசற்குருமணியே. (௧௭)

ஆன்றேயென்றேதுமவ்வற்புதப்பாடலழகியசின்
மன்றேயுடையவர்பூசையினீயருள்வாய்மலர்ந்த
தின்றேயுமுள்கினன்கண்டேயென்றேதவினித்ததருட்
குன்றேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧௮)

ஞானவொழுக்கம்வறந்ததுட்டக்கலிநாளில்வந்து
ஞானவொழுக்கப்பிரசங்கமாமழைஞாலமெல்லாங்
கானமெனப்பொழிந்தார்த்தாயருட்புட்கலாவர்த்தமே
கோனமதாறுமுகநாவலசற்குருமணியே. (௧௯)

தண்டாவருட்பிரசங்கப்பெருமழைத்தண்ணமுதைக் [ன்றால்
கொண்டோர்கொண்டுய்யமற்றெஞ்சியதோகொள்ளேகோத்தய
கண்டார்கழகமென்கால்கள்குளங்களிற்கட்டிவைத்தாய்
கொண்டாடெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௨௦)

அஞ்சுமுகமதுதோன்றிடிலாறுமுகம்வருமென்
றெஞ்சலிலாமொழிதந்தாய்மலைக்கிலக்கேயதின்னு
நெஞ்சினுணின்றதுதந்தகொலுவுங்கண்ணோர்நின்றசெங்
குஞ்சரவாறுமுகநாவலசற்குருமணியே. (௨௧)

நாவலர்பாவலர்ஞானிகள்யோகிகளுமெனவே
காவலநாட்டிலிந்நாள்பலர்வாழுங்கருமமெல்லாம்

பூவலயஞ்செய்தபாக்கியநீவந்தபுண்ணியங்காண்
கோவலவாறுமுகநாவலசற்குருமணியே. (௨௨)

இருவேறுலகத்தியற்கையென்பார்க்கினியென்சொல்லுகேன்
திருவோநின்வாயிலைக்காத்தனண்ஞானத்திருநின்மடக்
குருகார்ந்தபல்லிகள்வாயிலைக்காத்தனள்கோமளமே
குருவேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௨௩)

ஞானவரோதயதீனதயாபரநாதகுணா
கானதிராவிடவேதபராயணகாருணிக
பானசுதாநிதிசாலலோகாதீதபாவநனீ
கோனருளாறுமுகநாவலசற்குருமணியே. (௨௪)

வைதிகசைவநிலைதளராதுவளர்க்கவந்த
மைதவிர்கண்டத்தெம்வாழ்வேநின்போலமதிக்கிலிந்தப்
பொய்திகழ்ஞாலத்தில்யாரேயுளர்பல்புரைநெறிகளீ
கொய்தெழுமாறுமுகநாவலசற்குருமணியே. (௨௫)

யாரேவருகுநர்நின்போலயாரறிவிக்குநர்மற்
றியாரேயிகழும்புகழெனப்பூணுநரென்றுமொன்று
யாரேநியமங்கடைபோகவுய்க்குநர்ஞானமதிக்
கூரேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௨௬)

பொய்யாமணிவிளக்கேநின்றனும்புகன்றவர்பாற்
செய்யாளமருமரோகந்திடநிலைசீலமரு
ணையாதசொல்வலிஞானமுண்டாமிதுநன்றுகண்டாங்
குய்யாவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௨௭)

அடித்தடித்துவக்காரமுன்றீற்றியவற்புதத்தைப்
பிடித்துய்கிலாரதுகோபமென்றேசிலர்பேயருண்மை
விடுத்திறந்தார்தலைமேலெழுத்தார்தமைவிட்டதந்தோ
கொடுத்தமெய்யாறுமுகநாவலசற்குருமணியே. (௨௮)

ஐயாநின்னருளினில்லைதாலுமஃதொரரும்பெறலென்
றெய்யாதுநின்னடிகாத்திருந்துய்ந்தனரெத்தனைபேர்
சையாகசப்பதன்றேநோயெளிதிற்றவிர்ப்பததி
குய்யாவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (உகூ)

நீநனிதேற்றிடிற்றேறுதவரெவர்நின்மொழியா
மேநனியாற்றிடிற்பாறுதவரெவரின்னருணின்
காநனியேற்றிடினேறுதவரெவர்காட்சிதந்த
கோநனியாறுமுகநாவலசற்குருமணியே. (கூ०)

வைதிகநூல்பொதுசைவஞ்சிறப்பென்னும்வாய்மைநெறி
பொய்திகழாதுவரம்புசெய்தாய்புரிபுண்ணியர்கள்
மொய்திகழ்நின்னடிநீழிவாழ்கபன்மூர்க்கர்நெறி
கொய்தெழுமாறுமுகநாவலசற்குருமணியே. (கூக)

அருளாரெங்காழித்துரைமுதனல்வரருளிச்செய்த
பொருளாரநாதிதிராவிடவேதத்தைப்போற்றுநெறி
தெருளார்தரமன்வரம்புசெய்தாய்சைவதேசிகவெங்
குருவேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (கூஉ)

நான்மறைபூட்டியநற்கதவந்தனைநாகர்முனி
மேன்முறையோரஞ்சிவேறகன்றார்விரகார்மெய்த்தமிழ்ப்
பான்மறையேதிறந்திட்டதுதம்முட்பரமதென்னே
கோன்முறையாறுமுகநாவலசற்குருமணியே. (கூகூ)

நால்வர்பெருமைப்பிரசங்கப்பாலைநயந்தன்னைநின்
பால்வருவார்கடைப்பால்வருவேனிளம்பாலனைநம்
பால்வருவாயென்றுன்பாலழைப்பாரையபண்பருட்செங்
கோல்வருமாறுமுகநாவலசற்குருமணியே. (கூச)

அஞ்சவருவதுமில்லையுடையாரருட்டமரென்
செஞ்சொற்சுருதியநுபவநின்னருட்செய்கைகளின்

மஞ்சகண்கூடெனக்கண்டனம்பேரருள்வாய்ந்தமத
குஞ்சரவாறுமுகநாவலசற்குருமணியே. (௩௫)

அத்தாநினக்குத்தெரியுமன்றேசண்பையந்தணர்முன்
கைத்தாளக்கோலத்தர்கல்லூரென்றோதியகாரணமென்
சித்தேதபல்லாயிரர்க்கேவீடுகொள்ளைசெறித்ததென்சீர்க்
கொத்தாரெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௩௬)

அரசேசொல்வேந்தர்மறைவாயிலைத்திறந்தாரங்ஙனே
விரைசேர்பொழில்வெங்குருநாதர்பூட்டினர்வேறிலரே
யிருவோரும்வாய்மூரியைந்தணர்தம்முளியன்றதென்னே
குறைதீரெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௩௭)

நாதாமுன்னாவலர்கோமான்மன்கூனினலிந்துகண்ணின்
நீதோய்தரச்சிவன்பாலிரந்தாரென்பசேர்பிறவிப்
போதாருமப்பிணிடேனோர்க்குப்போக்கினரேபுகலென்
கோதீரெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௩௮)

சித்தேசொல்வாதபுரிப்பெருமான்றன்முன்றென்மறைக்காத்
தொத்தாரிதழியரேசென்றவரதுசூழ்ந்திலராய்க்
கத்தாவென்றப்புறங்கண்டனரேயென்னைகாரணஞ்சீர்க்
கொத்தாரெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௩௯)

அருளேமுன்னாலடியோகீசுரரருளாகரர்மாற்
கொருசீர்க்குமரனைத்தீவிழியாலெரித்தாருதுவே
முருகார்குமரனைத்தந்ததென்றாலிதின்முற்றதென்னே
குருவேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௪௦)

ஞாலத்துளார்நன்றுதீதறியார்நம்மனோர்பலர்நின்
பாலர்க்குப்போதங்கொளுத்துறநீசெய்தபண்பினரு
ணூலெத்தனைநனிகாலத்தசீலத்தநோன்மையநு
கூலத்தவாறுமுகநாவலசற்குருமணியே. (௪௧)

மூப்பாளிரட்டியின்மும்மைகொள்வாரெம்முழுமுதல்வர்
வைப்பார்மடங்கள்குருபூசைகளன்பர்வைபவங்க
ளப்பாவங்கங்குவழங்கவைத்தாயுன்னருள்வண்மையென்
குப்பாயம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௪௨)

மூன்றேபதார்த்தஞ்சத்தாத்துவிதம்முடிவென்றுமுறை
தேன்றோய்மறைதந்திரமிரண்டும்மொத்துச்செப்புமுண்மை
வான்றோய்மெய்கண்டவழிப்பயனுமெனவாய்மைவைத்தாய்
கோன்றோயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௪௩)

நீறுநெருப்புமுணரச்செய்தார்தமிழ்நேர்மையொர்காற்
பேரருட்காழியிறைவரவர்கொள்கைபேணியநீ
பார்நிலமுற்றுநிதமுணரச்செய்தபான்மையென்னே
கூரருளாறுமுகநாவலசற்குருமணியே. (௪௪)

மறையிருளைவத்தினிற்றைதபொருதமனமுதலா
வறைபதினாறுமுன்வேண்டிக்கொண்டாரருணந்தியென்ப
லிறைவவியற்றெருடுதோன்றினையேயெம்மிருளிரித்துக்
முறைதவிராறுமுகநாவலசற்குருமணியே. (௪௫)

கைச்சுட்டினாற்கள்ளங்காட்டிக்கொடுத்தகௌணியர்து
மெய்ச்சுட்டினார்களவைத்தமிழ்த்தோட்டின்விரிபிரசங்
கச்சுட்டிஞானிகாட்டிவைத்தாயெங்கலிதவிர்க்கக்
ரூச்சுட்டுமாறுமுகநாவலசற்குருமணியே. (௪௬)

இந்நீணிலத்தினின்மெய்ம்மாப்புகழையெடுத்தெடுத்துச்
சொன்னேன்றனையொர்குறையுமில்லாதின்பந்துய்க்குமிள
மன்னேயெனநனிவாழவைத்தாயருள்வான்முகிலே
கொன்னேரெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௪௭)

ஆளுடையாயெனையன்புடையேனலனையநின்பொற்
றாளிணையேயுறுதஞ்சமென்றன்பர்தழைத்துநிற்பச்

சூளுறவின்றியிப்பாழ்மாயவாழ்விற்றொடக்கினனெங்
கோளரியாறுமுகநாவலசற்குருமணியே. (௪௮)

அன்னையருண்மெய்ச்சிவஞானபோதங்கொண்டாணிழற்கீழ்த்
தென்னேர்முகத்தின்முகமாயிருந்ததிருக்கொலுவே
யென்னேரமுநின்னருட்கொலுவாயெமக்கெய்தியதே
கொன்னேரெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௪௯)

கோலாகலரவகீதாகநகணகோகநத
மாலாதரசிவஞாநாமிர்தசிசுவாகதிப
லீலாதிபமணிவாதாபிமதப்பிரேரகனீ
கூலாவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௫௦)

கண்ணீர்க்கமலத்தன்பிள்ளைகளுல்வர்தங்காலில்விதி
கண்ணீர்க்கமலமளித்தோன்மகன்றலைக்கண்விதியா
வண்ணுவந்தோமற்றமைந்திலதேயஃதென்னையருள்
கொண்ணுவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௫௧)

முப்புரஞ்செற்றுமென்றோர்கதைமூட்டிமுடித்ததெல்லாந்
தப்பிலர்மூவரையெய்ப்பிலர்வேலைக்குத்தக்கவரென்
றப்புறங்கொண்டதையொப்புறவோர்ந்தனமாவிதென்கொல்
குப்புரவாறுமுகநாவலசற்குருமணியே. (௫௨)

ஐயஞ்சிலரடியார்க்கெளியன்னென்றருந்தமிழ்ப்பாய்
பொய்யஞ்சுகொற்றங்குடிபுகுந்தார்க்குய்த்தபொற்பிதென்னே
பையஞ்சினார்முதலோர்மன்றுணின்றதைப்பார்த்திலர்கொல்
குய்யஞ்சொலாறுமுகநாவலசற்குருமணியே. (௫௩)

மீளலிலாமுத்தியென்றருண்மன்றுள்விகிர்தரவ
ராளைவிழுங்கிகொலம்மதம்பால்வந்தவாளையெல்லா [ணுட்
மாளச்செய்துட்கொண்டடக்கிக்கொண்டாரிதன்வாய்மையென்
கோளுரையாறுமுகநாவலசற்குருமணியே. (௫௪)

ஆள்விழுங்கிக்கொருளவாளெனவந்தவற்புதங்கொல்
கோளிலழகுசிற்றம்பலத்தாரொடுகூட்டுறவி
ணுளுமொருவரொருவரைப்பேணினிர்நாங்கண்டதே
கோளரியாறுமுகநாவலசற்குருமணியே. (௫௫)

கண்டவர்தாமுரிற்காணுதவருநின்காட்சியொன்றுக்
கொண்டிடஞானவொளிகாட்டிலேயவர்கொள்பயனுந்
தண்டலிலாதுசமமாவங்கங்குத்தழையவைத்தாய்
கொண்டலெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௫௬)

முப்போடிளமையறிவினிலன்றிப்பொய்மெய்யுடல
யாப்பாலிலேயென்றிடநின்சைவக்கழகத்திளைஞர்
வாய்ப்பாடமில்லின்முதியோருங்கேட்டுமகிழவைத்தாய்
கோப்பாரெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௫௭)

வேதத்தினந்தமுடிவேசித்தாந்தவிழுப்பொருடற்
போதத்தினந்தம்புகுந்தோரறிகுவர்போதமில
நாதத்தரெங்ஙனறியவல்லாரெங்ஙனுடுவர்தங்
சோதித்தையாறுமுகநாவலசற்குருமணியே. (௫௮)

தேவாரமென்றருடென்மறைநூலைத்திருமுதல்வ
ராவாவிலக்கங்களாவகுத்தாரெனதாரியத்தை
மாவாழ்மன்றுரென்பொருமையல்சிதல்வாய்க்களித்தார்
கோவேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௫௯)

நாடோறுமன்றுள்வருவார்தம்பாற்சற்றுநாவலசைத்தா
லேடேவருமதையின்றிமன்றுடுமிறைவரன்பர்
மாடேசென்றங்கைவருந்தவெழுதியவாய்மையென்னே
கோடாரெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௬0)

முன்னேபிறந்ததருள்வாசகநந்தமூவர்மொழி
பின்னேபிறந்ததுபேணுமிவற்றைமுன்பின்னெனவே
மன்னேர்கொளநம்பியாண்டார்வகுத்தனர்வாய்மையென்னை
கொன்னேரெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௬௧)

சொல்லாதசைவத்திருமுறைச்சூழலைச்சொல்லியுமன்
பொல்லாதபிள்ளையெனவொருநாமம்புனைந்தவர்தாஞ்
சொல்லாரெனினதைச்சூழுநர்யாரவர்ச்சூழிற்பொல்லார்
கொல்லோவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௬௨)

பெற்றோர்தமக்கதுபொல்லாதபிள்ளையெனினும்பிறர்
சற்றேநயந்துமன்கொண்டாடவேதந்தைதாயும்வெள்க
வற்றுதசைவத்திருமுறைச்சூழல்வகுத்ததென்ப
கொற்றவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௬௩)

திருமுறைகண்டிராசாதிராசமன்சென்னிவள்ளால்
வருமுறையில்லெனிற்பொல்லாதபிள்ளையவினிரம்பத்
தருமுறையாவர்கொல்வல்லுநர்யார்க்கதுதான்வசமாங்
குருமுறையாறுமுகநாவலசற்குருமணியே. (௬௪)

எள்ளுண்டையப்பமவனுளிகேரமிவைமுதலா
வள்ளியுட்கொண்டதொரானந்தமோபிள்ளையத்தரவர்
கள்ளம்வெளிவரவுள்ளுறுமாமுறைகாட்டிற்றென்னே
கொள்ளருளாறுமுகநாவலசற்குருமணியே. (௬௫)

பொல்லாதபிள்ளையினூல்வருநன்மைபுகுந்துரைக்கிற்
சொல்லாலளவிடலாமேநல்வெண்ணெய்ச்சுவேதவனர்
கொல்லேசைவாகமமுற்றுமளித்தவுதவியென்னை
கொல்லோவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௬௬)

நால்வர்தமிழவைநான்மறைக்குள்ளுறைநான்மறையே
நால்வரவற்றைவெளியிடன்மாத்திரநண்ணினரே
நால்வரவர்சிவசிற்சத்திதான்வந்தநாதர்களே
கோலவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௬௭)

சிவமேயருட்சத்திசாதாக்கியமைந்துசெம்முகமாப்
பவமாரதோமுகத்தாறுமுகமவைபற்றியவை
தவமாரவொன்றெனமானுடமாய்ச்சண்பைசார்ந்ததன்றோ
குவமாரெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௬௮)

சிவமேயருட்சத்திவாகிசதத்துவஞ்சேர்ந்துயிருற்
பவமேதுடைப்பவிருமாயைதாண்டிப்பகுதியொரீஇத்
தவமார்கொலுவிருந்தப்பரென்றிங்ஙன்றழைத்ததன்றே
குவமாரெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௬௯)

சிவமேயருட்சத்தியாடியிற்றோய்ந்துதிருநிழற்றத்
துவமார்வியாசசகளத்தினாலசுந்தரனாய்
சிவமார்பரனென்றபிநயங்காட்டிநயந்ததன்றே
குவமாரெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௭0)

சிவமேயருட்சத்திதான்பராசந்திதிருந்துவிர்ந்து
பவமாருமாயைபகுதியைம்பூதப்படியொருவித்
தவமோங்கவாதபுரிவந்துவாழ்வுதழைத்ததன்றே
குவமாரெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௭௧)

நால்வர்வரவொன்றுநற்சிசுபாவநயந்ததன்றே
நால்வர்வரவொன்றுநற்சேடபாவநயந்ததன்றே
நால்வர்வரவொன்றுநற்சகபாவநயந்ததன்றே
கோலவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௭௨)

நால்வர்வரவொன்றுநற்சீடபாவநயந்ததன்றே
நால்வர்வரவவைநால்வகைவந்தநலங்கடமை
நால்வழிநின்றுறுநால்வர்பெறவந்தநான்மையவே
கோலவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௭௩)

சிவமேபருட்சத்தியாமுருவாஞ்சிவகாமியென்றுந்
தவமாரிருமைத்தனமாமமிர்தந்தகுமுத்தியாஞ்
சிவமேயிருமைச்சுடராமிருமைத்திருநல்குமாங்
குவமாரெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௭௪)

இருமைத்திருநல்குமீருணர்வாமிவ்விரகசிய
மொருமைத்திருவுருவேய்ந்தருளாமின்புறுபயமா
மிருமைக்கெழுமைக்குமெம்மைக்குமெங்களிருஞ்செல்வமாங்
குருமெய்த்தவாறுமுகநாவலசற்குருமணியே. (௭௫)

நானேயறிகுவனச்செல்வமேன்மையந்நான்முகன்மா
றானேனொடிப்பவன்றுமேயறிகுவர்தன்மயமாந்
தேனேயநந்தியச்செல்வருள்வீட்டிற்றிளைப்பதன்றே
கோனேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (எசு)

அச்செல்வமாமருட்பால்வேட்டெம்மாரருளாகரவின்
பச்செல்வமாஞ்சண்பைகாவலர்செய்யருட்பால்வழியை
யிச்செல்லுலகினில்யாவர்வல்லார்சொலவெண்ணிடத்தான்
குச்செல்வவாறுமுகநாவலசற்குருமணியே. (எஎ)

இருபாற்படுமவ்வொருபாலைவேட்டெம்மியற்சண்பையா
ரிருபாற்படுமவ்வொருபாற்பொருளையிறைஞ்சினரா
யிருபாற்படுமவ்வொருபான்மொழியையெடுத்தொலித்தார்
குருபாற்கொளாறுமுகநாவலசற்குருமணியே. (எஅ)

ஈரொலியேசிவஞ்சத்தியதாமியறுரகமா
மீரொலியேமறைதந்திரமாங்கலையாவையுமா
மீரொலியேபுத்திமுத்திகளாமெய்ப்பொருள்களுமாந்
கூரொலியாறுமுகநாவலசற்குருமணியே. (எகூ)

மும்மைக்குமுப்பயனேங்கவென்றேயெம்முழுமுதல்வ
ரம்மையப்பாவென்றழுதாங்கருளியழைத்தருளிச்
செம்மையப்பாலுண்டதுதமிழாகித்தெவிட்டிற்றன்றே
கும்மையிலாறுமுகநாவலசற்குருமணியே. (அ0)

சூலையென்றுற்றதுசூலையன்றேயதுதொல்சிவத்தின்
பாலதுவாய்வயின்பாலதுவாயுரைப்பாலதுவாய்
வாலியதென்றமிழ்ப்பாலதுவாய்வந்தமாமறையே
கோலவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (அக)

வல்வழக்கென்றதுவல்வழக்கேயதுவான்பதிமன்
றெல்வழக்கார்பசுபாசத்தொடர்பினைத்தூய்மைசெய்த
வல்வழக்கேய்துமாமறைமூலமன்றேமறுப்பார்
கொல்லெவராறுமுகநாவலசற்குருமணியே. (அஉ)

வேறினியென்னேவிளம்புவமன்றினுள்வேதியர்தாங்
தேறவெழுதியவொவ்வோரெழுத்துஞ்சிவலிங்கமே
பேறருள்வாசகமாமறைமூலம்பிறங்கிற்றன்றே
கூறருளாறுமுகநாவலசற்குருமணியே. (அ௩)

தோடென்றறிவிப்பதேயென்றுமுற்றுறுதொன்மொழியின்
பீடுயர்தாரகம்வேதமென்றும்பொருட்பெற்றியுளப்
பாடுவல்லாரருட்பாடுவல்லார்சிவப்பாடுவல்லார்
கூடருளாறுமுகநாவலசற்குருமணியே. (அ௪)

பாடுமிவ்வேதுவினுன்மறைக்குள்ளுறைநான்மறையே
சேர்டுடைத்தென்றமிழ்நால்வர்மொழியென்றதூய்மையினைப்
பீடுடையோர்கொள்வருழ்நன்கிலாதவர்பேயர்சிலர்
கோடுவராறுமுகநாவலசற்குருமணியே. (அ௫)

நாலுசிவங்களைந்நாட்டினில்வந்தருணன்மைபெற்ற
நாலுபிறப்பிலெழுதோற்றத்தெண்பத்துநான்கிலக்க
நாலுயிர்மாத்திரமோவரியாதிநாநாவுமன்றே
கூலவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (அ௬)

ஈருக்கம்வியாகரணம்மாதிசாத்திரசாலமெல்லா
மொருக்கிமுடிந்தமறையிடத்தேமறையொண்டமிழி
னிருக்கினிலேயவைபூட்டியபூட்டையிரித்தவன்றே
குருக்கொளெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (அ௭)

அற்புதமொன்றுகொல்பல்கோடியாய்விரிந்தண்டமெலாம்
வைப்பெனலாம்பிரமாணவலியினைவாய்திறந்து
செப்பவுமொப்பிலர்தென்றமிழ்க்கியாரிவர்தீயர்கெட்டேன்
குப்பொலியாறுமுகநாவலசற்குருமணியே. (அ௮)

சோதியிற்றும்புக்கதொன்றேவதுதன்சொந்துய்க்கவென்றே
காதலிற்கொள்ளேயளித்தன்றகத்திற்களவியல்செய்
நாதரிற்சேய்தன்றமிழ்மேலதாமெனநாட்டிற்றன்றே
கோதகலாறுமுகநாவலசற்குருமணியே. (அ௯)

காக்குந்தலைவர்க்குச்சாரூப்பியந்தந்துகாத்ததொன்ரோ
தாக்கும்பனைகட்கன்றணிக்கிப்பெண்மைநகவளித்து
மோக்கம்புகுத்துதமிழ்மேன்மையெங்குமுடிந்ததம்மா
கோக்கந்தவாறுமுகநாவலசற்குருமணியே. (கூ0)

காசினிக்கோநரனாய்நின்றுகாட்டியகள்ளமெல்லாந்
தூசில்வெள்ளானைப்பவனிசெய்காலையிற்றெல்லுலக
மாசின்றுணர்தரவெட்டவெளியினில்வந்ததன்றே
கூசொழியாறுமுகநாவலசற்குருமணியே. (கூக)

வெளியேயும்வந்துபின்வெள்ளக்கள்ளம்மெனமேவுங்கொலென்
றெளியேநமோநமவெதற்கினின்றுற்றதென்றுண்மைசொன்னார்
களியாருபமன்னியகுருநாதர்கைம்மாறதற்கென்
கொளுவார்கொலாறுமுகநாவலசற்குருமணியே. (கூ௨)

கண்ணன்றலையிலடிசூட்டியைந்தக்கரமுரைத்துத்
திண்ணஞ்சிவனருள்பாலித்தமாமுனிசெப்பிற்றின்றேற்
பண்ணந்திருத்தொண்டர்காதையெவ்வாறெவர்பற்றவல்லார்
கொண்ணம்பவாறுமுகநாவலசற்குருமணியே. (கூ௩)

செய்தவர்செய்முறைசெய்கைபயனித்திறங்கடம்மா
லெய்துமன்றேபிரமாணமென்பாரிதெண்ணுநர்க்கே
மெய்தருநால்வர்மொழிப்பிரமாணம்விளங்குமிருள்
கொய்தருளாறுமுகநாவலசற்குருமணியே. (கூ௪)

பண்ணார்பொழில்வெண்ணெய்மெய்கண்டநாதன்பயின்மரபி
னண்ணாநின்றேகுருசம்பிரதாயத்தடைந்தவரே
கண்ணார்தமிழ்மறைமேன்மைசைகண்டகருத்தருள்
கொண்ணவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (கூ௫)

மூலருரைத்தமொழியொன்றுமேயெம்முதுதமிழின்
பாலதுவாயதன்பாலதுலாநந்தபாரமிய
ஞாலமறியவிசைத்ததென்றலினிநாஞ்சொல்வதென்
கோலவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (கூ௬)

புகலியர்கோன்மன்றுறைசையிற்புக்குப்புரிதமிழின்
றகுமணமீண்டுமணக்கின்றதென்றுதடைப்பட்டுநின்
றிகலிறிருமந்திரம்பலிபீடத்திப்பாலெடுத்தார்
குகலியெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௯௭)

ஆதியுலாவொன்றங்காதியுலாசவருட்பரியின்
மீதிலுலாச்செய்துவிண்ணிலுலாவந்தவித்தகராற்
போதவுலாச்சிவசாதவுலாச்செய்புகழிதென்னே
கோதகலாறுமுகநாவலசற்குருமணியே. (௯௮)

சேரலர்ச்சேர்ந்துகைலைமலையிறைசீரரங்கி
னேரரங்கேறியவாதியுலாத்தமிழ்நேர்மையென்னே
சேரலர்சேருநரென்பதுசொல்லினிற்றீருங்கொலோ
கூரருளாறுமுகநாவலசற்குருமணியே. (௯௯)

முன்னேயிமயத்திருமணநாளினின்மூதுணர்வின்
மன்னுங்குறுமுனிதென்னாட்டவர்தமிழ்வல்லர்மறை
பன்னுயகவதுசொன்னயெனிற்சென்றுபார்ப்பலென்றார்
குந்நேரவாறுமுகநாவலசற்குருமணியே. (௧௦௦)

மணக்காலைவந்தருண்மாதவன்பால்வளர்வண்டமிழ்தா
னிணக்காலைவேலற்குமுன்வந்ததாயருணேரமுன்றக்
கிணக்காலையென்றென்றுநின்றுமுக்காலைகிளர்ந்ததன்றே
குணக்காலையாறுமுகநாவலசற்குருமணியே. (௧௦௧)

விரித்ததிருமுறையீராறுஞ்சைவம்விளைநிலமே
பரித்தபன்னூன்குசித்தாந்தமுமங்கட்பயில்விளைவே
தெரித்ததமிழ்ப்புவிச்செங்கோலரசுசெலுத்திடவங்
குரித்தருளாறுமுகநாவலசற்குருமணியே. (௧௦௨)

சீரார்கைலைவழிவந்தமெய்கண்டதேவர்முதற்
பேரார்குரவர்முன்னூட்டுசித்தாந்தப்பெரும்பயனைப்
பாரோர்கொண்டுய்யப்பகுத்தளித்தாயருட்பண்பின்மதிக்
கூராரெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧௦௩)

சுத்தாத்துவிதசித்தாந்தமென்றோதுமெய்த்தூநெறியை
வைத்தாண்டசைவகுலதெய்வமேயுன்னைவாழ்த்துமன்ப
ரொத்தார்திசைக்கென்வணக்கமெஞ்ஞான்றுமுறுகவருட்
கொத்தாரெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧௦௪)

நின்னருட்சைவசித்தாந்தப்பெருநிதிநீயளித்த
தென்னெனநீள்கைலாயத்தொராலடியேயர்தந்து
துன்னியகொற்றங்குடியானிடைப்பெற்றசொத்தென்றனை
கொன்னருளாறுமுகநாவலசற்குருமணியே. (௧௦௫)

சித்தாந்தநூலுட்டெளிவுரைகேட்கச்சிறிதுசிரித்
தத்தாமுன்ஞானப்பிரகாசமாயஃதருண்மரபி
னொத்தாம்பொழுதுசிவஞானமாமுய்த்துணர்கவென்றாய்
கொத்தாரெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧௦௬)

அப்பாமெய்ச்சைவவரசேவையாக்கிரவாசனமேற்
றுப்பார்நல்யோகிற்குகாசினனாயமர்துய்யகொலு
வெப்போதுமென்னுளங்கொண்டேன்கலியுமிரிந்ததன்றே
குப்பாயம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧௦௭)

அருட்பாவென்றோதுமம்மெய்ம்மொழிவேற்றுமையத்தனைக்கும்
பொருட்பான்மைபெற்றதைச்சைவமுறைக்கேபொருந்துமென்
மருட்பாக்களைந்தத்திருமுறைமேன்மைவரம்புசெய்தாய் [று
குருப்பார்வையாறுமுகநாவலசற்குருமணியே. (௧௦௮)

தேவேகுளத்தினிலம்மேயப்பாவென்றுதேம்பியழு
மூவாட்டைப்பச்சிளம்பாலனின்வந்தமுறையதனாற்
றேவாரம்வாசகமேமறைசீரருட்பாத்தெளிந்தாங்
கோவேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧௦௯)

சீரார்திருமண்விளையாடிவெண்ணெய்த்தெருவினுறு
மீராட்டைப்பச்சிளம்பாலனின்வந்தவியல்பதனா
லோரார்சித்தாந்தஞ்சித்தாந்தமற்றல்லனவேற்பவரார்
கூராரெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧௧௦)

வெண்ணீறும்பொன்றெளிமேனியுங்கண்மணிவீறழகும்
பண்ணார்சிவப்பிரசங்கக்கொலுவும்பழுத்தபண்பு
மெண்ணார்நின்செம்முகமண்டலமுந்நெஞ்சிருத்திவைப்பாய்
கொண்ணீயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧௧௧)

ஐயாமெய்ச்சைவவரசேயோர்விண்ணப்பமம்புவியிற்
பையாரரவல்குலார்மாயப்பாழிற்படருமெனைக்
கையாறுநின்னருட்கைகொடுத்தாளக்கடனினக்கே
துய்யாவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧௧௨)

அழுக்காறடைந்திங்கிழுக்காற்றில்வீழ்ந்திட்டலைந்துமந்தோ
வொழுக்காறுகாட்டிவழுக்கோம்புதுட்டவுவரிமக்கள்
விழுக்காற்றிலென்னைவழுக்காதருளுகமெய்ம்மையன்பர்
குழுக்காக்குமாறுமுகநாவலசற்குருமணியே. (௧௧௩)

குற்றங்களைந்துகுணங்கொள்ளலேநல்லகொள்கையென்ப
குற்றங்கள்கொண்டுகுணநீக்கலேநல்லகொள்கையென்றே
கற்றவர்பாலிருந்தெங்ஙனங்காலங்கழிப்பன்கண்டாய்
கொற்றவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧௧௪)

தாமின்புறுவதுலகின்புறக்கண்டுதாந்தமுள்ளே
காமுறல்செய்பமன்கற்றறிந்தாரென்பகாரியமஃ
தாமிந்தநாளினிலெங்ஙன்கொலோசென்றதையவையோ
கோமுந்துமாறுமுகநாவலசற்குருமணியே. (௧௧௫)

ஐயநின்னன்பர்குழுவிவன்யார்மற்றகற்றுகெனப்
பொய்யனறிமுகமில்லாதவன்கடைபோயொழியா
துய்யநம்பால்வருகென்றளிப்பாய்மெய்யுணர்வளித்த
குய்யவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧௧௬)

நன்றேயுறுகமன்றீதேயுறுகவெந்நாயகமே
நின்றேயமார்சைவதேசிகக்கோலமுநின்பெயரு
மென்றேயுமெள்ளளவும்மறவாவரமீந்தருளாய்
குன்றேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧௧௭)

நான்செய்கருமங்கள்பூசைசெபந்துதிஞானமெல்லாங்
கூன்செய்பிறைச்சடையார்கொள்கைநாட்டுகுருமுதனீ
தான்செய்ததேயருடான்செய்ததேசிவந்தான்செய்ததே
கோன்செயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (ககஅ)

ஐயவினுக்கள்பலவுளவின்னுமவற்றைநின்சீர்
பெய்யுமமையிடைச்சொல்லின்விரியுமென்பீதியினுற்
பையநிறுத்தினன்காலங்கண்டேபகரப்பணிப்பாய்
குய்யவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (ககசூ)

சித்தர்கண்ஞானிகள்சத்தியயோகிகள்செய்தவத்தர்
முத்தர்கள்கூடியபத்தவிலாசத்தின்முந்திநிற்குஞ்
சுத்தகொலுவெனக்கெவ்விடையென்றுகொரேற்றுவிப்பாய்
யொத்தருளாறுமுகநாவலசற்குருமணியே. (கஉ0)

ஈயாதலோபிகள்வாயிலைக்காத்திட்டிரந்திரந்தி
கோயாநின்றூர்பலர்பிச்சைபுக்காயினுமுண்பதலாற்
சீயானவர்தமைச்சிந்திப்பனோவுன்றன்சேயலனோ
கூயீயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (கஉக)

கங்கைக்கரையிற்கபிலைகொல்வார்சிலர்காதுகர்பா
லிங்கெத்தனையருநூலுரைத்தென்னவையேற்றுண்மகிழ்
பொங்கியும்பின்புபுறம்பழிப்பாரிவர்போங்கதியென்
கொங்கலராறுமுகநாவலசற்குருமணியே. (கஉஉ)

நின்னருளாற்சண்பைமன்னருளாற்சொல்லினேரரசு
தன்னருளாற்சுந்தரனருளான்மணிசான்மொழியா
னின்னருளாலன்றியானறிந்தேன்சிலவென்பதென்னை
கொன்னராறுமுகநாவலசற்குருமணியே. (கஉங)

ஈனவுலகினிற்பொய்புறங்கூறியிகல்விளைக்குந்
தீனர்மிகுத்தனர்நீதிபிழைத்ததுதீமையெங்கு
மானதுலகினிலேழைபிழைப்பதெவ்வாறருளாய்
கோனருளாறுமுகநாவலசற்குருமணியே. (கஉச)

பொய்யனிவன்சற்றுநேரிலனென்றுனைப்போதிப்பர்காண்
வெய்யரவருரைகொண்டெளியேனைக்கைவிட்டனையே
லுய்யுநெறிபிறிதில்லையப்பாவெங்களுத்தமனே
குய்யவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (கஉரு)

நின்பெயரேசொலியாசேதிமாசலநேர்ந்தவரு
மன்பினறுசுவைவார்க்கமொடன்னமருந்துகில்பொன்
னின்புறவெய்திமன்சம்பன்னராகுபவிங்கிதென்னே
கொன்புரியாறுமுகநாவலசற்குருமணியே. (கஉசு)

நின்னருணூல்கற்றுநின்னெறிக்கேநின்றநேர்மையர்தா
மென்னவரேனுமற்றென்னவரேயெவரென்னெனதாஞ்
சொன்னவையேனுமன்சொன்னவையேசெய்தொழும்பனியான்
கொன்னருளாறுமுகநாவலசற்குருமணியே. (கஉஎ)

ஐயாநின்மெய்ச்செயலெல்லாமெமக்கிங்கருட்செயலே
யையாநின்மெய்க்கொளுவெல்லாமெமக்கிங்கருட்கொளுவே
யையாநின்மெய்ம்மொழியெல்லாமெமக்கிங்கருண்மொழியே
குய்யாவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (கஉஅ)

தேவேசதாசிவமன்றேமறைகளுந்தித்தித்தது
தேவேசதாசிவமன்றேசிவாகமந்தித்தித்தது
தேவேசதாசிவமன்றேபுராணங்கடித்தித்தது
கோவேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (கஉகூ)

தேவேசதாசிவமேயிதிகாசமுந்தித்தித்தது
தேவேசதாசிவமன்றேமிருதியுந்தித்தித்தது
தேவேசதாசிவமன்றேதமிழ்மறைதித்தித்தது
கோவேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (கங௦)

தேவேசதாசிவமன்றேசித்தாந்தங்கடித்தித்தது
தேவேசதாசிவமன்றேபலகலைதித்தித்தது
தேவேசதாசிவமன்றேபலமொழிதித்தித்தது
கோவேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (கஙக)

தேவேசதாசிவமன்றேசிவையன்னைதித்தித்தது
தேவேசதாசிவமன்றேயயனரிதித்தித்தது
தேவேசதாசிவமன்றேசுரர்நரர்தித்தித்தது
கோவேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧௱௨)

தேவேசதாசிவமன்றேநின்னுள்ளமுந்தித்தித்தது
தேவேசதாசிவமன்றேநின்வாய்மொழிதித்தித்தது
தேவேசதாசிவமன்றேநின்றன்செயறித்தித்தது
கோவேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧௱௩)

தேவேசதாசிவமன்றேநின்செய்கைசிறக்குநெறி
யோவாதுஞற்றிமுன்பின்னையுடனுயிராயுறவாய்க்
காவேநினக்கொருகைத்துணையாய்க்கண்ணுமாயதென்ப
கோவேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧௱௪)

தேவேசதாசிவமன்றேமுத்தின்றிருச்சின்னத்துரை
யாவார்துறையிலருளியவாவெவ்வமயத்திலு
நீவாயழைக்குமுன்னேயென்றுநின்புடைநிற்பதுகாண்
கோவேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧௱௫)

தேவேசதாசிவமன்றேநீசென்றதிசைகளெல்லா
மாவாவிடும்பொருளுந்தந்தேவனுமாங்கமைத்துத்
தாவாதுநின்பிரபுத்துவசீலத்தைத்தாங்கியது
கோவேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧௱௬)

தேசமெலாம்புகழ்தேவேநின்பாதத்திருப்பொடிதான்
வாசநன்கூட்டுறுமான்மதமேயெனுண்மான்மதத்தை
வீசிமற்றேருட்டுறுமாமருந்தேசிரமேற்கொண்டனன்
கூசொழியாறுமுகநாவலசற்குருமணியே. (௧௱௭)

நின்னடித்தொண்டர்தந்தொண்டர்தந்தொண்டர்தந்நின்மலப்பூம், பொன்னடிப்பொன்னடிப்பொன்னடிப்பாதுகைப்பூம் பொடியா, லின்னடிப்பாலகன்மண்விளையாட்டையியற்றினனி யான், கொன்னெடித்தாறுமுகநாவலசற்குருமணியே. (௧௱௮)

நீபோற்றுமெய்ப்பொருள்பொன்னம்பலமென்றுநின்னைவிடா
தாய்போற்றுமெய்ப்பொருள்பொன்னம்பலமிதினாந்தரமென்
சேய்போற்றுமுக்கட்கரும்பின்சுவைகண்டதீங்கரும்பே
கூய்போற்றுமாறுமுகநாவலசற்குருமணியே. (கஙகூ)

தேவேநினக்குமுன்னெல்லைபின்னெல்லைதிருந்துவண்ணை
மேவார்புகழ்த்தில்லைநான்குநின்சீர்ப்படைவீடுகொண்டு
பாவாரழகுசிற்றம்பலத்தாரருள்பார்க்களித்தாய்
கோவேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (கச0)

எந்நாட்டினுமுயர்தென்னாடுசெய்தவிருந்தவத்தாற்
பொன்னாட்டினுமுயரீழநன்னாட்டிற்புரியுநல்லூ
ரிந்நாட்டிருப்படைவீடியைந்தோயெனையென்றுகொள்வை
கொன்னாட்டுமாறுமுகநாவலசற்குருமணியே. (கசக)

தேவேயருளாகசெல்வாவருளாகதெய்வவருட்
காவேயருளாககண்ணேயருளாககண்மணியுட்
பாவாயருளாகபாலனையாண்டருள்பாலித்திடுங்
கோவேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (கசஉ)

மாலார்பிறவியின்மாய்ந்தேனடைக்கலமங்கையர்தம்
பாலேதிரிந்தலைந்தெய்த்தேனடைக்கலம்பாழ்மலமாந்
தோலாவிடமொழித்தாள்வாயடைக்கலந்துய்யவரு
கூலாவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (கசங)

எப்பொருணூலையுமொப்பவொட்டாதிங்கிரும்பகைசெய்
தப்பழுக்காறுசொன்னொப்புரவாண்மைகொள்சாதுக்கடந்
துப்பினிம்மாலைசமர்ப்பணஞ்செய்தனன்சோதிநின்பாற்
குப்புரவாறுமுகநாவலசற்குருமணியே. (கசச)

புண்ணியநின்னருண்மேன்மையெங்கேயென்றன்புன்மை யெங்
பண்ணியலுந்துதிமாலையென்றோர்குற்றம்பண்ணினனா [கே
லண்ணனின்சேயன்பினாலமைத்தேன்பொறுத்தாண்டருள்சாட்
குண்ணியவாறுமுகநாவலசற்குருமணியே. (கசரு)

திருவுமெய்ச்செல்வமுஞ்சீர்த்தியுமாயுளுந்தேசுமருள்
வருமுறைமுத்தியுஞ்சித்தியுநின்சைவமாமரபின்
மருவினர்க்கென்றும்வழங்குவிப்பாயருள்வான்முகிலே
குருமரபாறுமுகநாவலசற்குருமணியே. (௧௪௬)

முத்துச்சிவிகைத்தமிழ்த்துரைவாய்மூர்முனிகள்வெள்ளை
மத்தகத்தந்திப்பவனிப்பெருமான்மணிவாசகஞ்சொல்
சித்தக்குலபதிதந்திருப்பாதஞ்சிறந்துவெல்க
கொத்தொத்தவாறுமுகநாவலசற்குருமணியே. (௧௪௭)

மங்கையர்தம்முளரசிகுலச்சிறைமாவழுதி
துங்கமன்சேரர்திருமூலரம்மைமநந்துாயசண்டி
சிங்கர்குழுத்தனித்தொண்டர்தஞ்சீர்வெல்கதேனிதழிக்
கொங்கலராறுமுகநாவலசற்குருசிகாமணியே. (௧௪௮)

திருத்தொண்டர்தந்திருவந்தாதிபாடியசீர்கொணம்பி
திருத்தொண்டர்மாச்கதைசேவித்தருள்நைநகர்ச்செல்வனூர்
பெருத்தொண்டபயரநபாயர்சீர்வெல்கபேசுபுகழ்க்
குருத்தொண்டவாறுமுகநாவலசற்குருமணியே. (௧௪௯)

மெய்கண்டநாதசித்தாந்தசைவத்துரைமேலையருள்
கைகண்டநந்திமறைஞானசம்பந்தர்சார்முகிலின்
மைகண்டகொற்றங்குடியார்புகழ்வெல்கவல்வினையைக்
கொய்கண்டவாறுமுகநாவலசற் குருமணியே. (௧௫௦)

பிணக்குப்புறமதநூல்களைநீஇச்சிவம்பேணியதி
ணிணக்குசித்தாந்தமரீஇச்சிவசாதனமேன்றுகொண்டு
தணப்பிலதீதப்பெருவாழ்விற்றெண்டர்தஞ்சார்புவெல்க
குணக்குலவாறுமுகநாவலசற்குருமணியே. (௧௫௧)

பூதலம்வாழ்கதண்பொன்முகில்வாழ்கபுவியரசர்
வேதசிவாகமமெய்த்தமிழ்வேதம்விளங்குசிவ
போதசித்தாந்தமன்னீடூழிவாழ்கமெய்ப்பூரணவெங்
கோதகலாறுமுகநாவலசற்குருமணியே. (௧௫௨)

## நூற்பயன்.

பத்தியினாற்சற்குருமணிமாலைபடிப்பவர்க்குச்
சித்தியுமுத்தியுமீவாரழகுசிற்றம்பலத்தார்
கொத்தருளாறுமுகநாவலசற்குருமணியா
லித்தலங்காத்துக்கடப்பாடுபூண்டவியைபினன்றே.

நாவலசற்குருமாமணிமாலைநயந்துட்கொள்வார்
நாவலராய்ப்புவிகாவலராய்ப்பொன்னிறுட்டினெழிற்
காவலராயருட்கண்வலராயின்பக்கட்டமுதாந்
தேவலராவர்சிற்றம்பலத்தாரடிசேர்ந்திருந்தே.

## சற்குருமணிமாலை முற்றிற்று.

மெய்கண்டதேவன்திருவடிவாழ்க.

ஆறுமுகநாவல னடியிணைபரவுதுந்
தேறுமுகவின்பந் திகழ்தரற்பொருட்டே.

ஸ்ரீஜ்ஞானஸம்பந்தபரமாசார்யபரப்பிர்ம்மணே நம:
ஸ்ரீமெய்கண்டநாததீர்த்தாநந்ததேசிகேந்த்ரேப்யோநம:
ஸ்ரீவிருஷபஸ்வாமிசரணகாருண்யவாகிசேப்யோநம:
ஸ்ரீமதாறுமுகநாவலதிராவிடசைவவாசஸ்பதிப்யோநம:

திருச்சிற்றம்பலம்.